# குன்றக்குடிக் குமர பஞ்சகம்

**ஆசிரியர் : அருள்திரு பொன்னம்பலசிவம்**

*****

**அவையடக்கம்**

குழறிக் குழறிக் குமரனைப் பா(டு)என்ற
பழமொழியை நெஞ்சில் பதித்து – மழலைமொழி
கொண்டுயான் கூறும் குமரபஞ் சகம்தன்னைக்
கண்(டு)உவப்பார் மெய்ப்புலவர் கள்.

**காப்பு**

உலகமயக் கம்தீர்ந்து ஒருசிவத்தைச் சார்ந்து
கலகமனப் பேய்க்குரங்கைக் கட்டிக் – குலவநினைக்
கும்சகத்தில் சீர்த்திபெற்ற குன்றக் குடிக்குமரா
பஞ்சகத்திற்(கு) ஐங்கரன்காப் பாம்.

( பஞ்சகம்= ஐந்து பாக்களுடைய நூல் )

**நூல்**

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

உலகோர்கள் தொழும்இமயப் பிடிஈன்ற மதகரியின் உதித்த வீ ரப்
பலம்ஆகும் அசுரவிபத் திரளைஅழி ஆறுமுகப் பரசிங் கேற்றை
நலதேவர் குறமானைக் கலந்துமகிழ் நம(து)அம் மானை
மலைமேவு கிழவனைக் குன்றக்குடிவாழ் குமரனைநாம் வாழ்த்தி வாழ்வாம்.

**குறிப்புரை :** பஞ்சகம்= ஐந்து செய்யுளுடைய இலக்கியம். விபத்திரள்= குற்றத்தின் கூட்டத்தை. பரசிங்கேற்ற= பரம்பொருளாகிய ஆண்சிங்கம். தேவர்தருமான்= தெய்வயானையம்மை. குறமான்= வள்ளிநாச்சியார். அம்மான்= தந்தை. கிழவன்= அண்டத்தை உரிமையாக உடையவன்.

( 2 ) பிடிப்பானை வேல்,தெய்வப் பிடியானைக், கீரனுக்காப் பெலத்த குன்றம்
இடிப்பானை, நமைத்துயரால் இடியானைக், கடம்(பு)அலரால் இயன்ற தாரை
முடிப்பானைக் கயவர்நண முடியானை, அறுமீன்கள் முலைத்தீம் பாலைக்
குடிப்பானை, உயர்குன்றக் குடியானை, நம(து)உளத்தில் குடிவைத்(து) உய்வாம்.

**குறிப்புரை :** தெய்வப்பிடி= தெய்வயானையம்மை. பெலத்த= வலிமையான. குன்றம் இடித்தது= நக்கீரரை மலைக்குகையிலிருந்து விடுவிக்க. இடியான்= துன்புறுத்தாதவன். தாரை முடிப்பான்= மாலையைச்சூடியவன். நண= நெருங்க. அறுமீன்கள்= கார்த்திகை மாதர் அறுவர்.

**நயம் :** நான்கு அடிகளிலும் பொழிப்புமோனை முரண்தொடையில் அமைந்தநயம் காண்க.

( 3 ) அடியானை அருணகிரிக்(கு) அடிப்பானை யாதஇன்பம் அளித்த தெய்வப்
பிடியானைக் குறமகள்கைப் பிடிப்பானை கதிர்மணிகள் பிறங்கும் ஆறு
முடியானை எச்செயலும் முடிப்பானை முனிவர்தொழு மோலிக் குன்றக்
குடியானை உமைதன்பால் குடிப்பானை உளமனையில் கூடி வாழ்வாம்.

**குறிப்புரை :** அடியான்= அடியவன். பிறங்கும்= ஒளிரும். முடியான்= திருமுடி – கிரீடம்சூடியவன். மோலி முனிவர் தொழு= சடையுடைய முனிவர்கள் வணங்கும்.

**நயம் :** நான்குஅடிகளிலும் பொழிப்புமோனை முரண்தொடையில் அமைந்தநயம் காண்க.

( 4 ) .ஞாயி(று)என மிளிர்முடியான் திங்கள்எனத் திகழ்முகத்தான் நகுசெவ் வாயால்
தேயுஓர் அற்புதன் நல்வியாழன் நிகர்த்(து)இருக்குமொழி ஏலக் கூந்தல்
தோயும்உமை மகன்வெள்இ டபத்தன்அருட் குருசனியாத் தூயன் என்றும்
மாய்தல்இலாக் குகன்குன்றக் குடிக்குமரன் என(து)உளத்தில் வதிவான் மன்னோ.

**குறிப்புரை :** முடி= சடைமுடி. திங்கள்= முழுநிலவு. நகுசெவ்வாயால் தேயு ஓர் அற்புதன்= புன்முறுவல் பூக்கும் சிவந்த வாயால் தீயை வெளிப்படுத்திய ஒப்பற்ற அற்புதம்செய்தவன்.( முப்புரத்தைச் சிரித்து எரித்தது ). நல்வியாழன் நிகர்த்து இருக்கும் மொழி= குற்றமில்லாத பொன்போன்று.விளங்கும் சொற்கள். ஏலம் கூந்தல்உமை தோயும்= மணம்பொருந்திய கூந்தலுடைய உமையம்மையம்மையைப் புணரும். மகன்= ஆண்மகண் வெள் இடபத்தன்= வெண்மையான விடையில் வரும் சிவபிரான். அருட்குரு= உபதேசித்த குரு – சிவகுரு. சனியா= பிறப்பில்லாத. மாய்தல்= இறத்தல். வதிவான்= வாழ்வான்.

**பொழிப்புரை :** சூரியன்போன்று ஒளிரும் சடைமுடி, முழுநிலவுபோன்று விளங்கும் திருமுகம், கொண்டு, புன்முறுவல்பூத்த செவ்வாயில் சினத்தால் நெருப்பைவெளிப்படுத்திய அற்புதனும், வெள்ளிய விடையினைய ஊர்தியாக உடையவனும், குற்றமில்லாத பொன்போன்று விளங்கும் சொற்களும், மணம்பொருந்திய கூந்தலுமுடைய உமையம்மையைக் கூடுகின்றவனும் ஆகிய சிவபிரானுக்கு; மகனாக

வந்தவன் ஆகிய அருட்குருவும், பிறப்பில்லாத தூயனும், இறப்பில்லாத குகனும் ஆகிய குன்றாக்குடிக் குமரப்பெருமான் என்னுள்ளத்தில் தங்கிவாழ்வான்.

**இலக்கணக்குறிப்பு :** மன்னோ – அசைநிலை.

( 5 ) திருச்செந்தில் முதலான தலம்போல்என் உளத்தலத்தும் சிறப்பாத் தங்கி
அருட்செல்வம் தனைக்கொடுத்(து)உன் அடிபோற்றும் பெருவாழ்வில் அமைத்(து)ஆள் ஐயா!
உருச்செந்நெல் வாழைஎன வாழைஎலாம் தென்னைஎன ஓங்கும் செல்வம்
இருக்கின்ற திருக்குன்றக் குடிக்கந்த கடுக்கண்டர்க்(கு) இனிய தேவே.

**குறிப்புரை :** உரு= அழகு. கடுக்கொண்டார்= நஞ்சினை உண்ட சிவபிரான். ஆள்= ஆட்கொள்க.

(இதனை உதவிய திருமிகு கும. சு. குமரப்பன் அவர்களுக்கும், 3- 5- 2014 இல் வெளிவந்த குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாமலரில் வெளியிட்ட மலர்க்குழுவுக்கும்நன்றி.)

திருச்சிற்றம்பலம்.

**இடும்பன்**

குன்றக்குடி ஆதீனப்புலவர். க கதிரேசன்.

காவடிக்கு முன்னவனே! கைவேலான் செவ்வேளின்
சேவடிக்கீழ் நின்றருளும் செம்மலே! – மேவும்
இடும்பைஎலாம் தீர்ப்பாய் இடும்பா!நீ எம்மைஅடும்
கடும்பகையை வெல்ல அருள்.

திருச்சிற்றம்பலம்